https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

10TH NOVEMBER 2024 | WWW.PUTHUSUDAR.LK | MONDAY | ISSUE: 105



# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு செலவு ரூ.110 கோடி

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு வருடாந்தம் 110 கோடி ரூபா செலவிடப்படுகிறது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு 32 கோடி ரூபாவும்,ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்புக்கு 25 கோடி ரூபாவும்,மைத்திரியின் பாதுகாப்புக்கு 18.5 கோடி ரூபாவும், சந்திரிக்காவின்

06



# 1200 துப்பாக்கிகள் மாயம்

விஜபிக்களின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு அமைச்சால் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்த 1600 துப்பாக்கிகளில் 400 துப்பாக்கிகள் மாத்திரமே அரசிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் தெரிவிக்கிறது.

1200 துப்பாக்கிகள் தொடர்பில் எதுவித தகவலும் இல்லை என்று அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

இந்தத் துப்பாக்கிகளை மீள பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஒரு மாதமாக அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேர்தலின் பின் ஆட்சியைப் பிடிப்பதற்கு

## தினேஷ் தலைமையில் நடவடிக்கை

முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி தேர்தல் முடிந்த பின்

எதிர்கட்சி எம்பிக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து நாடாளுமன்ற அரசை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறிய முடிக்கிறது.

இவர்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியில் இருந்து விலகி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# தண்ணீர் மட்டுமே கொடுக்க முடியும்


தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொள்ளும் வாக்காளர்களுக்கு நீர் மாத்திரமே கொடுக்க முடியும் என்றும் சாப்பாடு மற்றும் பணம் போன்றவை வழங்க முடியாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

02


ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன




ராதா கிருஷ்ணா


சீதா ராம்


ஸ்ரீ பாலாஜி


நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

www.puthusudar.lk
2024 NOVEMBER 10 - SUNDAY

# அவகாசம் வழங்குவோம்

இந்த ஆட்சி மலர்ந்ததும் கூடவே பல மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.அரச செலவில் சிக்கனம், எளிமை, ஊழல், மோசடி இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் அவற்றுள் அடங்கும்.

அவற்றுள் இன்னும் ஒன்றுதான் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிடுகின்றன வேட்பாளர்களுள் அதிகமானவர்கள் புத்தியாவர்களாகவும் இளையவர்களாகவும் இருப்பது.

பலர் இதை நல்ல விடயமாகப் பார்த்தாலும் சிலர் இதை வரவேற்கவில்லை.காரணம் சிலருக்கு பழக்கப்பட்ட முகம் தேவைப்படுகிறது.

நல்லவர்களும் வேண்டும் பழக்கப்பட்ட முகங்களும் வேண்டும் என்றால் எப்படி.

இரண்டில் ஒன்றைத்தான் தெரிவு செய்ய முடியும்.

பழக்கப்பட்ட முகங்களால் நாம் அடைந்த நன்மைகள் எவையும் இல்லை என்பதால்தானே நாம் புதிய ஆட்சியை உருவாக்கினோம். அப்படி உருவாக்கிவிட்டு நாடாளுமன்றத் தேர்தலில் மாத்திரம் பழையதை எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது .இது உண்மையான மாற்றமாக அமையாதே.

இந்த நாட்டைக் கட்டி எழுப்புவதாக இருந்தால் ஜனாதிபாதியை மாத்திரம் மாற்றி சரி வராது் ஜனாதிபதி பதவிக்கு மாத்திரம் புதியவரை நியமித்து சரி வராது.ஜனாதிபதி மாத்திரம் நல்லவராக இருந்து சரி வராது.

எல்லாமே புதிதாக இருக்க வேண்டும் எல்லோருமே நல்லவர்களாக இருக்க வேண்டும் .அப்போதுதான் ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்புமே மாறும்.அப்படி மாறினால்தான் முழு நாடுமே மாறும்.

இனிமேலும் அவர்கள் சம்பாதிப்பதற்காக --அவர்கள் சம்பாதித்து எங்களை சிக்கலில் தள்ளுவதற்காக- பொருளாதாரத்தை சீரழிப்பதற்காக -அரச சொத்துக்களை வீண் விரயம் செய்வதற்காக - அவர்களின் பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்க வைப்பதற்காக -அந்த பிள்ளைகளின் ஊடாக இவர்கள் திருடிய சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இடமளிக்க முடியாது.

இந்த சந்தர்ப்பத்தை நாம் தவறவிட்டால் மீண்டும் பழைய நிலைமை ஏற்பட்டுவிடும்.

மீண்டும் ஒரு தடவை அதை சுத்தம் செய்வதற்காக எம்மால் பாடுபட முடியாது.கிடைத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த அரசாங்கம் ஊழல் ,மோசடிகளை ஒழிப்பதற்காக -திருடப்பட்ட சொத்துக்களை மீள கைப்பற்றுவதற்காக -அவற்றை அரசுடமையாக்குவதற்காக -வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை -பணங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அந்த நடவடிக்கை வெற்றியடைவதற்கு நாம் எமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

இதை எமக்கு கிடைத்த இறுதி சந்தர்ப்பமாகப் பார்க்க வேண்டும்.

## முன்னாள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**பாதுகாப்புக்கு 9 கோடி ரூபாவும் கோத்தாவின் பாதுகாப்புக்கு 3 கோடி ரூபாவும் ,ஹேமா பிரேமதாசாவின் பாதுகாப்புக்கு 2 கோடி ரூபாவும் அரசால் செலவழிக் கப்படுகிறது.**

**பாதுகாப்பு ஊழியர்களின் உணவு,நீர்,மின்சாரம் சீருடை மற்றும் பயணம் போன்றவற்றுக்கே இந்த பணம் செலவிடப்படுகிறது என்று அரச தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.**

## தண்ணீர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பணம் மற்றும் பொருட்கள் வழங்கப்படுவதாக கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# நௌஸானாவுக்கு மலேசியாவில் விருது




Europian Nations Campus ன் பணிப்பாளராகக் கடமையாற்றி வரும் எம். வை. நௌஸானாவுக்கு, இலங்கையின் உயர் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றி வரும் அர்ப்பணிப்புமிக்க பணிக்காக Women top50 14th Proffessional Women Awards Malaysia விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மலேசியாவில் இடம் பெற்ற விருது வழங்கல் நிகழ்விலேயே இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. சாய்ந்தமருதைப் பிறப்பிடமாகக் கொண்ட நௌஸானா சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தில் கலாச்சார உத்தியோகத்தராகக் கடமையாற்றி தற்போது Europian Nations Campus ன் பணிப்பாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ரணிலை ஜனாதிபதியாக்கும் அமெரிக்காவின் சதியே அறுகம்பே விவகாரம்...

அறுகம்பே பகுதியில் உள்ள இஸ்ரேலிய சுற்றுலாவாசிகள்மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று கூறி புரளியைக் கிளப்பி சர்வதேசம் வரை பரபரப்பை ஏற்படுத்திய அந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மையையும் அதன் பின்னணியில் இருந்த சக்தியையும் அம்பலப்படுத்துவதுதான் இந்த ஆக்கத்தின் நோக்கம்.

நேராக விடயத்துக்குள் நுழைவோம்.

### நாடாளுமன்ற ஆட்சி : ரணில் போட்ட திட்டம் : உடைத்தெறிந்த சஜித்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் நாட்டில் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

அவற்றுள் ஒன்றுதான் அரசியலில்

## முஸ்லிம்களை பாதுகாத்த அனுர அரசு...

நீண்ட காலம் நிலைத்து நின்ற பல அரசியல்வாதிகள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து ஒதுங்கியமை.

ஆனால்,தனது மரணம் வரைக்கும் கட்சியின் தலைமைத்துவ பதவியில் இருந்து விலகுவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் –முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

30 வருடங்களாக கட்சியின் தலைவராக இருந்து–அனைத்துத் தேர்தல்களிலும் தோல்வியடைந்து–இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் அடி வாங்கி தொடர்ந்தும் அரசியலில் பயணிக்கவே விரும்புகிறார் ரணில்.

### நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க ரணில் வகுத்த வியூகம்

ஜனாதிபதி தேர்தல் முடிவைப் பார்த்ததும் அவரது கிரிமினல் மூளை வேறு விதமாக யோசிக்கச் செய்தது.

அந்தத் தேர்தலில் அனுராகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றபோதிலும் அவருக்கு எதிராகக் கிடைத்த வாக்கு வீதம் 58.

அனுரவுக்குக் கிடைத்த வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தலில் அப்படியே கிடைக்குமாக இருந்தால் 105 ஆசனங்கள்தான் அனுரவுக்குக் கிடைக்கும்.

அப்படியென்றால் நாடாளுமன்ற ஆட்சி அனுரவுக்கு இல்லை.

ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் ஒரே அணியில் நின்றால் – ஒரே அணியில் போட்டியிட்டால் நாடாளுமன்ற ஆட்சியைப் பிடித்துவிடலாம்.

இதுதான் ரணிலின் கணக்கு.

சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தியையும் –ஜனாதிபதி தேர்தலில் ரணிலுடன் நின்ற மொட்டு உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டாலே போதும்.இந்த இலக்கை அடைந்துவிடலாம் என்று நினைத்தார்..

அதற்கு முதலில் சஜித் தரப்பை இணைக்க வேண்டும்.மொட்டு ஆட்களை இணைப்பது பெரிய காரியமல்ல.

### ரணிலுக்கு ஒரே கல்லில் மூன்று மாங்காய்கள்

எப்படியோ சஜித் தரப்புதான் எதிர்க்கட்சியாக வரப்போகிறது.

சஜித் தரப்பை இணைத்துக்கொண்டால் ரணிலுக்கு ஒரே கல்லில் மூன்று காய்கள்.

ஒன்று நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க முடியும் அல்லது பிரதான எதிர்க்கட்சியாக அமர முடியும்.

அடுத்தது சஜித் தரப்பின் வாக்குகளை வைத்து ஐ.தே,கவின் கணிசமான எம்பிக்கள் நாடாளுமன்றம் நுழைய முடியும்.அதனூடாக ஐக்கிய தேசிய கட்சியை கட்டியெழுப்ப முடியும்.

மூன்றாவது சஜித்தை அரசியலில் இருந்து மெல்ல மெல்லத் துடைத்தெறிய முடியும்.

### சஜித்தை வளைக்க வியூகம்

இந்த இணைவுக்கு சஜித்தை இணங்க வைக்க வேண்டும்.வென்றால் சஜித்துதான் பிரதமர் என்று ஆசை ஊட்ட வேண்டும்.

இதற்கு வசதியாக ரணில் செய்தது என்ன தெரியுமா ?

நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிடப்போவதில்லை என்று அறிவித்தார்.

ரணில் போட்டியிடாததால் சஜித் பிரதமராவது இலகு.

இதை வைத்தே சஜித்தை இழுக்க முடியும்.

இதுதான் ரணிலின் பிளான்.

### இரு தரப்பு பேச்சுக்கள் ஆரம்பம்

தேர்தல் முடிந்து சில நாட்களில் ரணில் தலைமையில் இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுகிறது.

சஜித் தரப்புடன் இதுபற்றி பேசுவதென்று முடிவெடுக்கப்படுகிறது.

ஹர்ச டி சில்வா,எரான் விக்ரமரத்ன ஆகியோரைத் தொடர்புகொள்கிறார் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்தன.

இதுபற்றிக் கூறுகிறார்.

சஜித்துடன் பேசிவிட்டு அவர்களும் தயார்.

கங்காராம விஹாரையில் பேச்சு.

சஜித் தரப்பில் லக்ஷ்மன் பொன்சேகா மற்றும் ரஞ்சித் மதுமபண்டார.

ரணில் தரப்பில் ருவான் விஜயவர்தன மற்றும் சாகல ரத்நாயக்க.

### சஜித்தே ஐ.தே.கவின் தலைவர்

முதல் கட்டமே இறுக்கம்.ரணில் தரப்புக்கு.

காரணம்...???

சிக்கலான நிபந்தனைகள் .சஜித் தரப்பில் இருந்து...

01–ரணில் ஐக்கிய தேசிய கட்சி தலைமை பொறுப்பில் இருந்து விலகி சஜித்தை அதற்குத் தலைவராக்க வேண்டும்.

02.ரணில் விரும்பும் ஒருவரை செயலாளராக நியமிக்க முடியும்.

03.செயற்குழு உறுப்பினர்களை இரு தரப்பும் சேர்ந்து நியமிக்கலாம்.

போன்ற பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

முதல் நிபந்தனையே சிக்கல்.

இதற்கு உடன்படுவாரா ரணில்...?

இல்லை...ஒருபோதும் இல்லை..

இவ்வாறு பல தடவைகள் பேச்சு.

வர வர இருக்கமாகின்றன நிபந்தனைகள்.சஜித் தரப்பு நிபந்தனைகள்.

முதலில் யானைச் சின்னத்தில் போட்டியிட இணக்கம்.பின்னர் தொலைபேசி சின்னம் என்கிறது சஜித் தரப்பு.

### ஆத்திரமடைந்து எழுந்து சென்ற ரணில்

ரணிலுடன் இது தொடர்பில் சந்திப்பு.

விவரிக்கிறார்கள் கூட்டத்தில் நடந்ததை.

குறிப்பாக,அந்த நிபந்தனைகளை...

தலைவர் பதவியைத் துறக்க வேண்டும் என்ற நிபந்தனையை...

அதற்கு விருப்பமில்லை ரணிலுக்கு..

ஆனால்,அவரது கட்சியில் சிலர் அவர் விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில்...

அகில விராஜ் காரியவசம்–ஆசு மாரசிங்க ஆகியோர் அந்த நிலைப்பாட்டில் ...

நீங்கள் தற்போதைக்கு பதவி விலகி பிரதி தலைவர் ருவான் விஜயவர்தனவிடம் கொடுங்கள்.தேர்தல் முடிந்து ஏனையவற்றைப் பார்த்துக்கொள்வோம் என்கிறார்கள் இவர்கள் இருவரும்.

இது ரணிலுக்குப் பிடிக்கவில்லை.

கோபம் வந்துவிட்டது.

சடாரென எழுந்து வேறு அறை ஒன்றுக்குள் செல்கிறார்.

### ரணில் விடாப்பிடி

சிறிது நேரம் கழித்து –அவரது கோபத்தைத் தணிக்க விட்டு சாகல உள்ளிட்ட சிலர் அந்த அறைக்குள் சென்று –அவரை ஆறுதல்படுத்தி மீண்டும் அழைத்து வருகிறார்கள் பேச்சு மேசைக்கு.

மீண்டும் தொடர்கிறது பேச்சு.

நிபந்தனைகளை கணக்கில் எடுக்காது ஒன்றிணைய வேண்டும். தேர்தல் முடிந்து நிபந்தனைகளை மாற்றிக்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டில் ராஜித சேனாரத்ன,தலதா அத்துகோரல,அகில,ஹரீன் பெர்னாண்டோ,நவீன் திஸாநாயக்க,ரவி கருணாநாயக்க ஆகியோர்.

ஆனால்,இதற்கு எதிரான நிலைப்பாட்டில் –ரணிலுக்கு ஆதரவாக சாகல,வஜ்ஜிர சமன் ரத்னபிரிய உள்ளிட்டோர்.

விட்டுக்கொடுப்பதாக இல்லை ரணில்.

எங்களை நம்பி இருக்கும் மொட்டு ஆட்களையும் பார்க்க வேண்டும் என்கிறார் ரணில்.

உண்மைதான்...

ரணில் தலைவர் இல்லையென்றால் மொட்டு உறுப்பினர்கள் ஐ.தே.கவுடன் சேர்ந்து நிற்கமாட்டார்கள்.

சரி...

இது தொடர்பில் மொட்டு ஆட்களுடன் பேசிப் பார்ப்போம் என்கிறார் ராஜித..

### சின்னம் தொடர்பில் சிக்கல்

அன்றைய தினமே மொட்டு ஆட்களுடன் சந்திப்பு.பிற்பகல் 3 மணிக்கு...

இணைந்து போட்டியிடுவதால் சிக்கல் இல்லை.சின்னம் தொடர்பில்தான் சிக்கல்.

யானை என்கிறது ரணில் தரப்பு.

கதிரை என்கிறது மொட்டில் இருந்து பிரிந்து வந்த தரப்பு.

அது சந்திரிகா வெற்றிபெற்ற அதிஷ்ட சின்னம் என்பது அவர்களது நம்பிக்கை.

இறுதியில் கேஸ் சிலிண்டர் என்று முடிவாகிறது.

### சஜித்துடன் இணையவே விருப்பம்

இருந்தாலும்,ஆசு.அகில,நவீன் சஜித் தரப்புடன் இணையவே விருப்பம்.

மறுநாள்,மீண்டும் ரணிலுடன் கூட்டம்.

கொஞ்சம் பின்வாங்கி சஜித்துடன் இணைவோம் வெற்றியை அடைவோம் என்கிறார் ஆசு.

ஆசுவை கடுமையாக விமர்சிக்கிறார் ரணில்.

இதனால் இறுதி முடிவில்லை.

### செயற்குழுவில் குழப்பம்

சில நாட்கள் கழித்து ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழுக் கூட்டம்.

அதிலும் இதே விவகாரம்தான்.

இந்த விவகாரத்தைக் கொண்டு வருகிறார் அகில விராஜ்.

ஒன்றிணைந்து போவதற்கு ஆதரவாக நவீன்,ஆசு,ஹரின் இப்படி எல்லோரும் பேச ரணில் எதிர்க்கிறார்.

ரணிலின் எதிர்ப்பு ஒன்றிணைந்து போவதற்கு அல்ல.தலைவர் பதவியை இராஜிமா செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு.

இணைய வேண்டும் என்பதற்காக ரணில் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய முடியாது.அப்படி செய்யத்தான் வேண்டும் என்றால் அந்த இணைவு தேவையில்லை என்கிறார்கள் சாகல,வஜிர.

ஆசு –அகிலவுக்கு ரணில் கடும் ஏச்சு.

தலைவர் பதவியை விடச் சொல்வதால்..

### சஜித்–ருவான் இணைத்தலைவர்கள்

கூட்டம் முடிந்துவிட்டது.இருந்தும்,பின்வாங்கவில்லை ஆசு, அகில ,நவீன் தரப்பு.

ரணிலின் அறைக்குள் செல்கிறார்கள்.

இன்னொரு யோசனையை முன்வைக்கிறார்கள்.

ருவானையும் சஜித்தையும் இணைத்தலைவர்களாக நியமிப்போம் என்பதுதான் அந்த யோசனை.

இது ஒரு கட்சி நாம் நினைத்தபடி தீர்மானம் எடுக்க முடியாது.மக்கள் எமக்கு எதிராக வீதிக்கு இறங்குவார்கள் என்று கூறுகிறார் ரணில் .

மொத்தத்தில் கட்சி வெல்லவேண்டும் என்பதை விடவும் தான் தலைவராக இருக்க வேண்டும் என்பதே ரணிலின் நிலைப்பாடு.

## அகிலவிராஜிக்கு ஆப்பு

அரசியலின் யதார்த்தத்தை உணர்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் சிலர் சஜித்துடன் இணைந்து போவது என்று முடிவெடுத்தனர்.

ஆனால்,கட்சியை விடவும் –அதன் எதிர்காலத்தை விடவும் –அது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதை விடவும் தனது தலைவர் பதவியே பெரிது என்ற நிலைப்பாட்டில் ரணில்.

இதனால் அதிருப்தியடைந்த அகிலவிராஜ் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து போட்டியிடுவதென்று முடிவெடுக்கிறார்.

ஆனால்,அவரது சொந்த மாவட்டமான குருநாகலில் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தராக இருக்கின்ற அசோக அபயசிங்கவுக்கு இதில் உடன்பாடில்லை.

அவரது எதிர்ப்பால் அகிலவால் போட்டியிட முடியாமல் போகிறது.

இறுதியில்,தான் போட்டியிடுவதில்லை என்று தந்திரபூர்வமாக அறிவித்துவிட்டார் அகில.

## இரண்டு ஆபத்துக்களில் இருந்து தப்பிய சஜித்

இந்த விடயத்தில் சஜித் புத்திசாலித்தனமாக செயற்பட்டுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

ரணிலுடன் சஜித் இணைவதால் சஜித் அணிக்கு எந்த நன்மையையும் இல்லை.

சஜித் அணிக்கு கிடைக்கும் வாக்குகளை வைத்துத்தான் ஐக்கிய தேசிய கட்சி எம்பி பதவிகளை பெரும்.

இது நடந்தால் சஜித் அணியின் உதவியால் ஐக்கிய தேசிய கட்சி மெல்ல வளரத் தொடங்கும்.

அது சஜித்தின் வளர்ச்சிக்கு ஆபத்து.

இந்த ஆபத்தில் இருந்து தப்பிவிடடார் சஜித்.

அடுத்து இரண்டாவது ஆபத்து...

சஜித் அணியும் ரணில் அணியும் இணைந்துகொண்டால் சஜித்தை அரசியலில் இருந்து முற்றாக துடைத்தெறிந்துவிடுவார் ரணில்.

மொட்டு கட்சிக்கு நேர்ந்த கதி தெரியும்தானே.

தன்னை ஜனாதிபதியாக்கி அழகு பார்த்த அந்தக் கட்சியை எப்படி உடைத்தெறிந்தார் என்று பார்த்தோம்தானே..

இதுதான் தனக்கும் நடக்கும் என்று சஜித்துக்குத் தெரியும்.

இதனால்தான் அவர் ஆரம்பத்தில் இருந்தே ரணிலுடன் இணைவதைத் தவிர்த்து வருகிறார்.

இப்போது ரணில் தரப்பு விடுத்த அழைப்பைக்கூட ஏற்பதற்கு சஜித் விரும்பவில்லை.

அதைத் தவிர்ப்பதற்காகவே கடுமையான நிபந்தனையை விதித்தார் சஜித்.

தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற நிபந்தனையை ரணில் ஒருபோதும் ஏற்கமாட்டார் என்று சஜித்துக்கு நன்றாகவே தெரியும்.

அதுபோக,மொட்டு எம்பிக்கள் ரணிலுடன் நிற்கிறார்கள்.

அவர்கள் பெரும் ஊழல்வாதிகள் என்று மக்களால் முத்திரை குத்தப்பட்டவர்கள்.

அவர்களுடன் போய் சஜித் அணியும் நின்றால் எல்லோரும் ஒன்று என்றாகிவிடும்.

சஜித் அணிக்குக் கிடைக்கவிருக்கின்ற வாக்குகள்கூட கிடைக்காது.



ஆகவே,புத்திசாலித்தனமாக செயற்பட்டு தன்னைக் காப்பாற்றியுள்ளார் சஜித் என்றே சொல்ல வேண்டும்.

## எதிர்கட்சிகளால் நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க முடியுமா ?

சஜித் அணி – ரணில் அணி –மொட்டில் இருந்து பிரிந்து வந்தவர்கள் என எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து நின்றால் நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்க முடியும் என்பது ரணிலின் கணக்கு.

ஜனாதிபதி தேர்தலில் அனுரவுக்கு எதிராகக் கிடைத்த 58 வீத வாக்குகள் அப்படியே எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்கும்.அதை வைத்து ஆட்சியைப் பிடிக்கலாம் என்கிறார் ரணில்.

இது எப்படி சாத்தியம் ?

முதலில் இடம்பெறும் தேர்தலில் வெற்றிபெறும் கட்சிதான் அடுத்து இடம்பெறும் தேர்தலிலும் வெற்றிபெறும் என்பது இலங்கையின் அரசியல் கலாசாரம்.

எதிர்கட்சிகளுக்குப் போடப்பட்ட மிதப்பு வாக்குகள் அடுத்த தேர்தலில் அரசுக்கே போடப்படும்.

பொதுவாக,ஜனாதிபதி தேர்தலில் அனுரவுக்கு எதிராக வாக்களித்த எம் மத்தியில் இருக்கின்ற வாக்காளர்களை எடுத்துப் பாருங்கள்.

அவர்கள் அரசின் பக்கம் நிற்பதைக் காணலாம்.

இப்படித்தான் முழு நாட்டிலும்.

## நாடாளுமன்றம் செல்வாரா ரணில் ?

ரணில் மீண்டும் நாடாளுமன்றம் செல்வாரா என்ற கேள்வி எம் மத்தியில் எழுகிறது.

அதற்கு வாய்ப்புகள் இல்லாமல் இல்லை.

அவர் தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தேசிய பட்டியல் ஊடாக வருவதற்கு வாய்ப்புகள் உண்டு.

அதற்கான தேவைகள் அவருக்கு உண்டு.

அது என்ன தேவைகள் என்று தனியாக அலசுவோம்.

## ரணிலின் அடுத்த சதி

இந்த இணைவு தோல்வியடைந்ததால் அடுத்த சதி ஒன்று இடம்பெறுகிறது.

அதுதான் அறுகம்பே விவகாரம்.

ஒக்டோபர் 19 முதல் 24 ஆகிய திகதிகளில் யூதர்களின் சமய நிகழ்வின்போது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டம் என்று தீட்டப்பட்டுள்ளது என்று ஒக்டோபர் ஆரம்பத்திலேயே தகவல் கிடைக்கிறது இலங்கை புலனாய்வு பிரிவுக்கு.

அதற்கு ஏற்ப செயற்பட்ட புலனாய்வு பிரிவினர் மூவரைக் கைது செய்து அறுகம்பே உள்ளிட்ட இஸ்ரேலிய சுற்றுலாவாசிகள் தங்கியுள்ள நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பைப் பலப்படுத்துகின்றனர்.

அரசின் இந்த செயற்பாட்டை –பாதுகாப்பு ஏற்பாட்டை நன்கு அவதானித்த பிறகும்கூட

23ஆம் திகதி அமெரிக்க தூதரகம் இந்தத் தாக்குதல் தொடர்பில் தகவல் வெளியிட்டதைத் தொடர்ந்தே விடயம் அம்பலமானது.

## ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு அமெரிக்கா சதி

இலங்கை அரசு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது என்று தெரிந்தும்கூட அமெரிக்கா இதை அம்பலப்படுத்தியது ஏன்?

இதை வெளியிடுவதன்மூலம் நாட்டில் குழப்ப நிலைமை ஏற்படும்.மக்கள் இந்த அரசின்மீதும் நம்பிக்கை இழப்பார்கள்.

ஈஸ்டர் தாக்குதல்போல் இதுவும் அமையப் போகிறது.இவர்களாலும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்று கருதும் மக்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

இதனால் எதிர்க்கட்சி நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்கும்.அதனூடாக ரணிலை பிரதமராக்கி பின்னர் ஜனாதிபதி பதவியைப் பறித்து ரணிலுக்கு கொடுப்பதுதான் அமெரிக்காவின் திட்டம்.

இந்த அரசு மூன்று மாதங்களுக்குள் கவிழும்,ஆறு மாதங்களுக்குள் கவிழும் என்றும் அப்படி கவிழ்ந்தால் மீண்டும் தானே ஆட்சியை பொறுப்பேற்பேன் என்றும் ரணில் கூறித் திரிவதன் மர்மம் இதுதான்.

ஆனால்,ரணிலின் –அமெரிக்காவின் திட்டம் வெற்றியளிக்கவில்லை.

அனுரவின் அரசு அதை வெற்றிகரமாக முறியடித்துவிட்டது.

## அனுரவுக்கு சீனா வழங்கிய வாக்குறுதி : ஆத்திரமடைந்த அமெரிக்கா

அனுரவின் ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்று அமெரிக்கா துடிப்பதற்கான காரணம் என்ன தெரியுமா?

அனுர கடந்த வருடம் சீனாவுக்குச் சென்றிருந்தார்.அதில் அரச உயர்மட்ட அதிகாரிகளை சந்தித்துப் பேசினார்.

அப்போது நாங்கள் ஆட்சி அமைத்தால் எங்களது ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று அனுர சீன அதிகாரிகளிடம் கேட்டார்.

அதற்கு உடனடியாக பதில் வழங்கப்படவில்லை.

பின்னர் இலங்கை வந்த சீன பிரதிநிதி ஜேவிபி அலுவலகத்துக்குச் சென்று அவர்களை சந்தித்துப் பேசுகிறார்.

அவர் ஒரு கடிதத்தை கொடுக்கிறார்.

அனுரவின் அரசு அமைந்தால் சீனா எப்படிப்பட்ட உதவிகளை செய்யும் என்ற விபரம்தான் அதில் அடங்கியுள்ளது.

அதில் முதலிடத்தில் இருப்பது சுற்றுலா துறைக்கான உதவி.

2 வருடங்களுக்குள் ஒரு கோடி சீன சுற்றுலாவாசிகளை இலங்கைக்கு அனுப்புவதுதான் சீனாவின் திட்டம்.

ஒரே நேரத்தில் இதைச் செய்வதற்கு சீனாவுக்கு முடியும்.ஆனால்,அப்படியொரு பெரிய எண்ணிக்கையை இலங்கையால் சமாளிக்க முடியாது.அதற்கான வசதி இலங்கைக்கு இல்லை.

அதனால் கட்டம் கட்டமாக இரண்டு வருடங்களுக்குள் ஒரு கோடி சுற்றுலாவாசிகளை அனுப்புவதற்கு சீனா தீர்மானித்தது.

அனுர ஜனாதிபதியானதும் உடனடியாக சீனா அதிகாரிகளை சந்தித்து இதுபற்றி பேசினார் அனுர.

முதல் கட்டமாக டிசம்பரில் 30 லட்சம் போரையும் இரண்டாம் கட்டமாக 30 லட்சம் போரையும் அனுப்புவது என்று சீனா அனுரவுக்கு உறுதி வழங்கியது.

தொடர்ச்சியாக 2 வருடங்களுக்குள் ஒரு கோடி சுற்றுலா பயணிகள் அனுப்பப்படுவார்கள்.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா அறுகம்பே புரளியைக் கிளப்பிவிட்டது.

தாக்குதலுக்கு அஞ்சி சீனா உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கை வரமாட்டார்கள்.

இதனால் இலங்கையின் சுற்றுலா துறை வீழ்ச்சியடைந்து இலங்கை டொலர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும்.

இதனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு ஆட்சி கவிழ்வதற்கு வாய்ப்புண்டு.

அறுகம்பே புரளின்மூலம் சுற்றுலா துறையையும் வீழ்த்தலாம் எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் அரசை வீழ்த்தலாம் என்பதுதான் அமெரிக்காவின் திட்டம் .

ஆனால்,இந்த சதியை அனுரவின் அரசு வெற்றிகரமாக முறியடித்துவிட்டது.

## முஸ்லிம்களை பாதுகாத்த அரசு

தகவல் கிடைத்ததும் மிகவும் ரகசியமாக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தது அரசு.

அமெரிக்கா அம்பலப்படுத்தும் வரை இந்த நாட்டு மக்கள் எவருக்கும் இது தெரியாது.

அரசும் புலனாய்வுத் தகவல் கிடைத்ததும் நாட்டுக்கு அறிவித்திருந்தால் முதலில் பாதிக்கப்படுவது முஸ்லிம்கள்தான்.

இஸ்ரேலியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஆகாது என்பதால் முஸ்லிம்கள்தான் இஸ்ரேலியர்கள்மீது தாக்குதல் நடத்தப்போகிறார்கள் என்றே சிங்களவர்கள் கருதுவார்கள்.

எதிர்க்கட்சிகளும் முஸ்லிம்கள்மீதே விரல் நீட்டும்.

இதனால் மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிராக பேரினவாதம் எழும்.

ஆனால்,இனி நாட்டில் இனவாதம் ஒன்று எழக்கூடாது –அதை வைத்து அரசியல் செய்யக்கூடாது என்று விரும்பும் அனுர அரசு மிகவும் கவனமாக இந்த விடயத்தில் இருந்து முஸ்லிம்களை பாதுகாத்துள்ளது.

மொத்தத்தில் முஸ்லிம்களையும் பாதுகாத்து அமெரிக்கா –ரணில் சதியையும் முறியடித்துள்ளது அனுர அரசு.

– ஊடகவியலாளர்
எம்.ஐ.முபாறக் –







# புத்தளம் மாவட்டம் இரட்டைக்கொடி சின்னத்தில் போட்டியிடும் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர் இஷாம் மரைக்கார் அவர்களுக்கு மக்களின் ஏகோபித்த அமோக வரவேற்பால் முன்னிலையில்

தனது இளமைப்பருவத்தில் இருந்தே மக்கள் சேவையில் பேரார்வம் கொண்டு மர்ஹூம் மு.யு. பாயிஸ் அவர்களின் அரசியல் பயிற்சிப் பட்டறையில் அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டவர்.

வெறும் அறிக்கைகளினால் சமூக ஊடகங்களை அலங்கரிக்காமல் இளம் வயது முதலே உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி சமூக சேவைகள் பல செய்து வருபவர். கட்டார் நாட்டில் இவரின் தொடர் சமூக சேவைக்காக புகழ் பெற்ற கட்டார் தேசிய அருங்காட்சியகத்தில் இவரது புகைப்படம் பொருந்திய விபரம் வைக்கப்பட்டுள்ளது. இது இலங்கையர் ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

சமூக சேவையின் பேரார்வத்தின் வெளிப்பாடுதான் இஷாம் மரைக்காரின் இந்த அரசியல் பிரவேசம் ஏனென்றால் மக்கள் சேவையினை முழுமையாக அனைவருக்கும் வழங்க வேண்டுமாயின் நமது கைகளில் அதிகாரம் இருக்க வேண்டும். அதுவே இவரின் இந்த அரசியல் பயணத்தின் துவக்கம். தகவல் தொழிநுட்பத் துறையில் (IT) பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர் (BSc IT (UK), MSc IT (UK) ஊமுஅிரவநச நுபெைநநச) மும்மொழியிலும் சரளமாகப் பேசக்கூடியவர். இளைஞனாக இருந்தாலும் பக்குவப்பட்ட சிந்தனையும் பகுத்தறிந்து பிரச்சினைகளுக்கான தீர்வை அரசியல் மான்போடு அனுகக்கூடியவர்.

தூர நோக்கோடும் மக்களுக்கான பல நல்ல திட்டங்களோடும் பயனித்துக் கொண்டிருப்பவர். குளிரூட்டப்பட்ட அறையில் இருந்த கொண்டு வெறுமனே மக்களின் பிரச்சினைகளை பேசுகிறேன் என நடிக்காமல் மக்களோடு மக்களாக வீதிகளிலே இறங்கி போராடிக்கொண்டிருப்பவர். புத்தளம் அறுவக்காடு குப்பை கொட்டும் பிரச்சினைக்கு ஆரம்பம் முதல் இன்று வரை போராடிக்கொண்டிருப்பவர். மக்களின் வலியைப் புரிந்த ஒரே வேட்பாளர் இஷாம் மரைக்கார்.

ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் ஒரு தலைவன் என்ற அடிப்படை நாதத்தோடு எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் நல்ல திறமையுள்ள தலைமைகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்.

மக்களின் எண்னோட்டத்தையும், நாடித்துடிப்பையும் வலிகளையும், நன்கு புரிந்த, அவர்களுக்காக துடிக்கின்ற, சிறந்த ஆளுமையுள்ள அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கக் கூடிய ஒரு அரசியல் தலைவன் உருவாகுவது அரிதிலும் அரிது. அப்படிப்பட்ட ஒரு தலைவன் மக்களுக்காக மக்களோடு கைகோர்த்து வந்து முன் நிற்கிறான். அவரின் கைகளை வாக்கு எனும் ஆயுதத்தால் பலப்படுத்துவோம்.

– நாளைய தேசத்தை தூய தேசமாக்குவோம் –



# புதிய இலச்சினை வெளியீடு



இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கல்வித் துறையில் சிறந்து விளங்குவது என்ற மைல்கல்லைக் கொண்டாடும் வகையில், புதிய இலச்சினை வெளியீடு மற்றும் ஒருடம் முழுவதுமான விழாக்கள் என்பனவற்றுடன் SLIIT இன் 25 வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் ஆரம்பித்துள்ளன.

SLIIT இன் வேந்தரும் தலைவருமான பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக, SLIIT இன் உபவேந்தரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பேராசிரியர் லலித் கமகே, SLIIT இன் சிரேஷ்ட பிரதி உபவேந்தரும், தலைமை ஆசிரியருமான பேராசிரியர் நிமல் ராஜபக்ஷ ஆகியோருடன், பீடாதிபதிகள், கல்விசார் ஊழியர்கள், பணியாளர் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களுடன் மறக்கமுடியாத நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த SLIIT இன் வேந்தரும் தலைவருமான பேராசிரியர் லக்ஷ்மன் ரத்னாயக குறிப்பிடுகையில், "கடந்த இருபந்தைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையில் கல்வி வழங்கும் முன்னணி நிறுவனமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. SLIIT சிறந்த கல்வியை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில்வழங்குனர்களால் அதிக தேவையைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்க முடிந்துள்ளது. 25 வது வருட நிறைவைக் கொண்டாடும் இந்தப் பயணத்தில் நானும் ஒரு அங்கமாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன். எதிர்காலத்தில் SLIIT மேலும் உயர்ந்த இடத்திற்குச் செல்லும் என்றும், உயர்ந்த மட்டத்தை ஏற்படுத்தும் என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன்" என்றார்.

# 20வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்



முன்னணி வடிவமைப்பாளர் மற்றும் நிலையான ஜவுளி உற்பத்தியாளரான Noyon Lanka Pvt., இலங்கையில் தனது 20வது ஆண்டு நிறைவை அண்மையில் கொண்டாடியது.

விநியோக தீர்வுகள் வழங்குனராக உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற Noyon, கடந்த 21 ஆம் திகதி பியகம தலைமை அலுவலகத்தில் "100 வருட ஜரிகை பாரம்பரியம், 20 வருட வடிவமைப்பு மற்றும் கைவினைத்திறன்" என்ற தொனிப்பொருளில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்து இந்த தனித்துவமான மைல்கல்லை கொண்டாடியது.

இந்நிகழ்வில் MAS Holdings நிறுவனத்தின் தலைவர் மகேஷ் அமலியன், உப தலைவர் ஷரத் அமலியன் மற்றும் MAS Holdings மற்றும் பிரெஞ்ச் லேஸ் உற்பத்தி நிறுவனங்களின் ஒத்துழைப்புக்காக அர்ப்பணிக்கப்பட்ட Noyon Calais இன் முன்னாள் தலைவர் Olivier Noyon ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் Marie Noelle, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதரகத்தின் பதில் தூதுவர். பியகம சுதந்திர வர்த்தக வலய முதலீட்டு சபையின் பணிப்பாளர் கித்சிறி குமாரசிங்க, MAS Holdings பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ மற்றும் Noyon பிரதம நிறைவேற்று அதிகாரி Husni Salieh ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலழுெ உடனான தொடர்பு குறித்து கருத்து தெரிவித்த திரு. மகேஷ் அமலியன், "பிரெஞ்சு ஓவியக் கலையை புதிய மைல்கல்லுக்கு கொண்டு வந்த நிறுவனமாக Noyon Lankait குறிப்பிடலாம். தற்போது இந்த நாட்டின் ஜவுளிப் பொருட்களுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது, இதன் மூலம் பெரும் முன்னேற்றம் அடைந்து பல்வகைப்படுத்தல் மூலம் இரண்டையும் தாண்டி எங்களின் சிறப்பை வெளிப்படுத்த முடிந்தது." என தெரிவித்தார்.

# DFCCஇற்கு இரு விருதுகள்




இந்தியாவின் புதுடெல்லி மாநகரில் இந்திய வர்த்தக சம்மேளனம் அண்மையில் ஏற்பாடு செய்த, 2வது ICC Emerging Asia Banking Conclave and Awards 2024 நிகழ்வில் இரு அங்கீகாரங்களைப் பெற்று DFCC வங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் வங்கித்துறையில் மகத்துவத்திற்கான அங்கீகாரத்திற்கு மிகவும் மதிப்புமிக்க நிகழ்வாக இது அமைந்துள்ளதுடன், "Best Performance of Growth" (மிகச் சிறந்த பெறுபேற்றுத்திறன் வளர்ச்சி) மற்றும் "Best Performance of Profitability" (மிகச் சிறந்த இலாபத்திறன்) ஆகிய விருதுகளைப் பெற்றுக்கொண்ட DFCC வங்கி, தொழிற்துறையில் தலைமைத்துவ ஸ்தானத்தை நோக்கிய தனது பயணத்தில் முக்கியமான சாதனை மைல்கல்லொன்றை நிலைநாட்டியுள்ளது.

DFCC வங்கியின் வலுவான நிதியியல் மூலோபாயம், தொழிற்பாட்டு மகத்துவம் மற்றும் தன்னுடன் தொடர்புபட்ட தரப்பினருக்கு மகத்தான மதிப்பை வழங்குவதில் காண்பிக்கும் ஓயாத அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான பலனாக இந்த இரட்டை அங்கீகாரங்கள் அமைந்துள்ளன.

மிகவும் போட்டிமிக்க மற்றும் சவாலான பொருளாதார சூழலில், கணிசமான வளர்ச்சி மற்றும் இலாபத்திறன் ஆகியவற்றை ஒரு நேரத்தில் அடையப் பெறுவது என்பது மிகவும் குறிப்பிடத்தக்க தொரு முயற்சி. பாதகமான சூழலுக்கு மத்தியிலும் தளைத்தோங்குவதில் வங்கியின் ஆற்றலை இவ்விருதுகள் வெளிக்காண்பிப்பதுடன், அதன் தலைமைத்துவ அணியின் நெகிழ்திறன் மற்றும் மூலோபாய சாமர்த்தியம் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுகின்றது.

# பணம் அனுப்பும் ஊக்குவிப்புத் திட்டம் வெற்றிகரமாக நிறைவு

Nations Remittance

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அதன் "We Transfer More Than Just Money" (நாம் பணத்திற்கு அப்பாற்பட்ட பரிமாற்றத்தை புரிகிறோம்) எனும் 2024 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் ஊக்குவிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இது வெளி நாடுகளில் இருந்து பணம் அனுப்புவதில் குறிப்பிடத்தக்க வகையிலான அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

12 வாரங்களாக இடம்பெற்ற இந்த பிரசாரத் திட்டத்தின் ஒரு அங்கமாக, வாராந்த பரிசுக் குலுக்கலும் முன்னெடுக்கப்பட்டது. இது வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் பயனாளிகளான அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு ஸ்மார்ட்போன்களை வெல்லும் வாய்ப்பை வழங்கியது.

வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்ட 12 அதிர்ஷ்டசாலிகள், அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, சவூதி அரேபியா, பஹ்ரைன், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து பணம் அனுப்பியிருந்தனர்.

இலங்கைக்கு வெளிநாட்டுப் பணம் அனுப்பும் தொகையை அதிகரிக்கும் பரந்த குறிக்கோளுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த திட்டமானது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் பணம் அனுப்பும் சேவைகளின் வளர்ச்சியை வலுப்படுத்துவதற்கான ஒன்றாகும்.

# Diva Fresh Gardenia & Rose அறிமுகம்




Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை வர்த்தகநாமமும், புத்தாக்கத்தின் கலங்கரை விளக்கமுமான தீவா, அதன் புத்தம் புதிய தயாரிப்பான Diva Fresh Gardenia & Rose சலவைத் தூளை அறிமுகப்படுத்துவதில் பெருமை அடைகிறது.

சலவை செய்யும் போது நுகர்வோர் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றான துணிகளில் நீங்காத துர்வாடையை எதிர்த்துப் போராடும் வகையில், இப்புதிய தயாரிப்பில் மேம்பட்ட வாசனைத் தொழில்நுட்பம் உட்செலுத்தப்பட்டுள்ளது.

மேம்பட்ட இரண்டு படிகளைக் கொண்ட "மேம்பட்ட வாசனைத் தொழில்நுட்ப" செயன் முறையைக் கொண்டுள்ள Diva Fresh Gardenia & Rose ஆனது, ஒரு சாதாரண சலவைத் தூளிலும் பார்க்க மேம்பட்டதாகும்.

இதன் மேம்பட்ட வாசனைத் தொழில்நுட்பமானது, வியர்வை, உணவுக் கறை, சூழல் மற்றும் சலவையின் போதான துர்நாற்றம் உள்ளிட்ட துர்வாடைகளை திறம்பட நீக்குவதோடு மாத்திரமல்லாமல், கார்டேனியா மற்றும் ரோஜா ஆகிய மலர்களின் நீண்ட நேர புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்தை ஆடைகள் மற்றும் துணிகளுக்குள் உட்செலுத்துகிறது. இதன் மூலம், பல முறை சலவை செய்ய வேண்டிய தேவையை Diva Fresh Gardenia & Rose இல்லாமல் செய்கிறது.

# DIMO மற்றும் SDF இணைவு



இலங்கையிலுள்ள முன்னணி பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனம் மற்றும் Sarvodaya Development Finance (SDF) ஆகியன இணைந்து, இலங்கை விவசாயிகள் உயர்தர விவசாய உபகரணங்களை இலகுவாக அணுகும் நோக்கத்துடன், அண்மையில் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளன.
விவசாயத் திறனை அதிகரிக்கவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் விவசாயத்தில் இயந்திரமயமாக்கலை அதிகரிப்பதுமே இந்த கூட்டாண்மையின் நோக்கமாகும்.
DIMO நிறுவனமானது, இலங்கையில் மேம்பட்ட ஜேர்மன் தொழில்நுட்பத்தில் அமைந்த STIHL Power Tool தயாரிப்பு வகைகளின் விநியோகஸ்தராக செயற்படுகின்றது. அத்துடன், STIHL Tea Pruner மற்றும் Tiller Machines ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கான தனித்துவமான நிதித் தீர்வுகளை இந்த கூட்டாண்மை மூலம் வழங்க Sarvodaya Development Finance எதிர்பார்க்கின்றது.
அதிக செலவில் விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, அத்தியாவசிய உபகரணங்களில் நிதியை முதலீடு செய்வதற்கான எளிய வழிகளை இந்த தீர்வுகள் வழங்குகின்றன.
இது விவசாயிகளின் பொருளாதார நிலையை கணிசமான வகையில் மேம்படுத்த உதவுவதோடு, பயிரிடல் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளில் விவசாயிகள் முதலீடு செய்யவும் உதவும். இந்த குத்தகை சலுகையைப் பெறும் வாடிக்கையாளர்கள் Tiller Machines உபகரணங்களுக்கு



20% முற்பணத்தையும் Tea Pruner உபகரணங்களுக்கு 10% முற்பணத்தையும் செலுத்த வேண்டும்.

# விவசாயப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு




விவசாயத் துறை நவீன மயமாக்கல் திட்டத்திற்காக, விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மற்றும் 2K Agro Products Limited ஆகியவற்றுடன் ஒரு மூலோபாய கூட்டு ஒப்பந்தத்தில் C. W. Mackie PLC நிறுவனம் அண்மையில் கைச்சாத்திட்டது.
இந்த திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் (EU) நிதியளிக்கிறது.
2018 இல் ஆரம்பிக்கப்பட்ட தனது பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லை C.W. Mackie PLC தற்போது கொண்டாடுகிறது.
அந்த வகையில் நிறுவனம் உள்நாட்டு உற்பத்தியில் ஒரு முக்கிய பங்கை வகித்து வருகின்றது.
இறக்குமதிகளுக்கான மாற்றீடு மூலம் தேசிய விவசாயப் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் அதே வேளையில், ஏற்றுமதி வருமானத்தை நிறுவனம் அதிகரிக்கிறது.
அத்துடன், விவசாய உற்பத்தி அமைப்புகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் வகையில் விவசாய மதிப்புச் சங்கிலிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது.
இது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அது மாத்திரமன்றி விவசாயிகளின் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல் போன்ற விடயங்களுக்கும் உதவும்.

# ஊழியர்களின் நலனுக்கு முதலிடம்

ஜனசக்தி குழுமம் (JXG), மார்பு புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு தமது ஊழியர்கள் மத்தியில் நலனை மேம்படுத்துவதற்காக இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஆசிரி ஹெல்த் உடன் கைகோர்த்து வெபினார் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.
இந்நிகழ்வை இராணுவ வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை ஆலோசனை வைத்தியரான தாத்தியா டி சில்வா முன்னெடுத்திருந்தார்.
இந்த அமர்வை ஏற்பாடு செய்ததை முன்னிட்டு ஜனசக்தி குழுமம் பெருமை கொள்வதுடன், தனது ஊழியர்கள் மத்தியில் மார்பு புற்றுநோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் பணியிடத்தில் நேர்த்தியான மனநிலையை ஊக்குவிப்பது போன்றவற்றை இலக்காகக் கொண்டு இந்த அமர்வை ஏற்பாடு செய்திருந்தது.
நேர்த்தியான ஈடுபாடு மற்றும் சமூக ஈடுபாடு போன்றவற்றுக்கு ஜனசக்தி குழுமத்தின் ஒப்பற்ற அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.





# BTEC மையங்கள் கௌரவிப்பு

Pearson BTEC Higher Education Forum 2024 நிகழ்வானது 2024 ஒக்டோபர் 23 அன்று கொழும்பு ஷங்கிரி-லா ஹோட்டலின் லோட்டஸ் நிகழ்வு மண்டபத்தில் இடம்பெற்றதுடன், இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர், மேதகு அன்ட்ரு பற்றிக் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளார்.

Pearson BTEC கல்வித் தகைமைகளை வழங்கும் உயர் கல்வி நிறுவனங்கள் மத்தியில் மகத்துவமாகத் திகழ்கின்றவற்றைக் கௌரவிக்கும் வகையில் Pearson UK ஆல் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த வருடாந்த நிகழ்வானது இலங்கையின் உயர் கல்வித் துறையின் நாட்காட்டியில் மிகவும் முக்கியமானதொரு நிகழ்வாகக் காணப்படுகின்றது. நாடெங்கிலுமிருந்து மிகச் சிறப்பாகச் செயற்படுகின்ற Pearson அங்கீகாரம் பெற்ற BTEC மையங்களை ஒரே மேடைக்கு கொண்டு வருகின்ற நிகழ்வாக அமைந்துள்ளதுடன், சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற Pearson BTEC கல்வித் தகைமைகளுக்கு உயர் தரத்திலான கற்றல் அனுபவங்களை வழங்குவதில் மேற்குறிப்பிட்ட மையங்களின் அர்ப்பணிப்பைப் போற்றும் நிகழ்வாகவும் காணப்படுகின்றது. உயர் கல்வித் துறையில் முக்கியமான பிரபலங்கள் ஒன்றுகூடி தமக்கிடையில் அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான முக்கியமான வாய்ப்பினையும் இந்நிகழ்வு வழங்கியுள்ளது.

# செலான் வங்கியின் ஹம்பாந்தோட்டை கிளை இடமாற்றம்

செலான் வங்கி அண்மையில் தனது ஹம்பாந்தோட்டை கிளையின் செயற்பாடுகளை இடமாற்றம் செய்தது.

செலான் வங்கியின் இடமாற்றப்பட்ட ஹம்பாந்தோட்டை கிளையின் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக உதவி பொது முகாமையாளர் திரு.ருவன் பெர்னாண்டோ மற்றும் பிராந்திய முகாமையாளர் (தெற்கு) திரு.லலந்த பெர்னாண்டோ மற்றும் கிளை முகாமையாளர் திரு.மாலக தனபால ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு 2024 ஒக்டோபர் 21ஆம் திகதி இலக்கம் 53, வில்மட் வீதி, ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்றது. இவ் இடமாற்றம் வாடிக்கையாளர் சேவையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு மூலோபாய முடிவாகும்.



திரு.ருவன் பெர்னாண்டோ, ஹம்பாந்தோட்டையின் வர்த்தக மேம்பாட்டிற்கு செலான் வங்கியின் பங்களிப்பு மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு செயற்பாட்டு திறன் மற்றும் நம்பகத் தன்மையை உறுதி செய்யும் முயற்சிகளை இந்த இடமாற்றம் வலியுறுத்துகிறது என்று தனது உரையில் தெரிவித்தார்.

# முற்பணம் வழங்கி வைப்பு

THE PLANTERS' ASSOCIATION OF CEYLON

பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (RPCs) தமது ஊழியர்களுக்கான பண்டிகைக்கால முற்பணத்தை தீபாவளி பண்டிகையுடன் ஆரம்பித்து வைத்ததாக இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் (PA) இன்று அறிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து RPC ஊழியர்களும் முந்தைய 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரை உயர்த்தப்பட்ட பண்டிகைக்கால முற்பணத்தைப் பெற்றுள்ளனர், இது 25% அதிகரிப்பைப் காட்டுவதுடன், அதே நேரத்தில் ஊழியர்கள் 25,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக 20% அதிகரிப்பைப் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் லலித் ஒபேசேகர கூறுகையில்: "தீபாவளி பண்டிகையின் கலாச்சார முக்கியத் துவத்தை அங்கீகரிப்பதற்காக RPCகள் முன்கூட்டியே மற்றும் தாங்களாகவே இந்த முடிவை எடுத்துள்ளனர்.

இந்த அதிகரித்த முற்பணத்தை வழங்குவதன் மூலம் - இது சமீபத்திய ஊதிய உயர்வு விகிதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது, RPC கள் ஊழியர்களுக்கு ஆதரவளிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்துகின்றன, மேலும் அவர்கள் இந்த பண்டிகைக் காலத்தை மேம்பட்ட மன அமைதி மற்றும் நிதிப் பாதுகாப்புடன் அனுசரிக்க அனுமதிக்கிறது." என தெரிவித்தார்.

# பட்டம் பயிலும் மாணவர்களுக்கு Sysco LABS

Sysco LABS அண்மையில் பொது மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பயிலும் மாணவர்களுக்காக முன்னெடுக்கும் தனது Project Guiding Leadership and Outreach (GLO) திட்டத்தை நீடித்துள்ளதாக அறிவித்துள்ளது. நாடு முழுவதிலும் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சமூகங்களில் மாற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. GLO-சான்றளிக்கப்பட்ட Sysco LABS ஊழியர்களால் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு, களனி, ரஜரட்ட, பேராதனை மற்றும் SLIIT பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியிருந்தது.

ஐக்கிய நாடுகளின் 17 நிலைபேறான இலக்குகளுடன் பொருந்தும் வகையில் அமைந்திருப்பதுடன், Sysco LABS' இன் பிரதான நோக்கு என்பது, 'உணவு மற்றும் அரவணைப்பை ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு பகிர்ந்து கொள்ளும் வகையில் உலகை இணைப்பது' ஆக அமைந்துள்ளது. சமூக சென்றடைவு மற்றும் நிலைபேறான விருத்தி ஆகியவற்றில் இளம் தலைமுறையினரை தயார்ப்படுத்தல் விழிப்புணர்வூட்டும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

